உ

கடவுள் துணை.

நற்கீரதேவர் அருளிச்செய்த

குமரதாலாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.



உ

கடவுள் துணை.

குமரதாலாட்டு.

காப்பு.

குமராவுனைத்தொழுதேன் குன்றெறிந்தவேன்முருகா
அமராவதிகாக்கு மாறிரண்டுதோளானே. 1

ஆறிரண்டுகைதலத்தா லசுரர்தங்கைசேனையெல்லாம்
வேறிரண்டுகூறுக வேல்விடுத்துவந்தோனே. 2

குயிற்கூவமயிலாடக் கோயிற்றிருச்சங்கூத
ஒயிலானமயிலேறி யுலகாளவந்தோனே. 3

இரண்டுமலைதிரண்டுருள விருகையிலும்வேல்வாங்கி
இரண்டுமலைநாலாக வெழுந்தருளிவந்தவனே. 4

பச்சைமயிலேறி பழத்திற்கொருநொடியில்
செச்சைமுழங்கத்தேயம் வலம்வந்தவனே. 5

தேவாதிதேவன் திருச்செவியிலந்நாளில்
மூவாதமந்திரத்தை மொழிந்தபிரானீயலவோ 6

தெள்ளிமணல்கொழிக்குஞ் செந்திற்பதிதனிலே
வள்ளிமயிங்கமயிலேறி வந்தவனே. 7

நினைத்தவிடந்தோறு நீலமயிலேறிவந்து
மனத்திற்கவலையெல்லா மாற்றும்பெருமானே. 8

என்றுமிளையானே யீராறுதோளானே
அன்றசுரர்வேர்களைய யம்புவியில்வந்தவனே 9

பொல்லாதநாயடியேன் புன்தலைமேற்பாதம்வைத்தே
எல்லாருங்காண வெழுந்தருளிவந்தவனே 10

தேன்மருவுஞ்சோலை தென்னருணைமாநகரில்
வானவர்கள்வந்துதொழ வரமளித்துநின்றவனே 11

வருணமயிலேறி வள்ளியம்மைதன்னுடனே
அருணகிரிகோபுரத்தி லஞ்சலென்றேநின்றவனே 12

வம்பலருஞ்சோலை வயற்றணிகைமாநகரில்
கும்பமுலைவெள்ளி குறமகட்குவாய்த்தவனே 13

ஏழையடியார்க ளெப்போதழைத்தாலும்
வாழிமயிலேறி வந்துவினைதீர்த்தவனே 14

மாற்றான்படைநடுங்க வாழுமயிலேறிவந்து
கூற்றுகச்சேனையெல்லாங் கொன்றுவெற்றிபெற்றவனே

வாரப்பெருமுலையாள் வள்ளியம்மைதன்னுடனே
வீரத்திருப்பதியாம் வேங்கடத்திநின்றவனே 16

முன்னைப்பிறப்பருக்க முற்காலஞ்செட்டியென்று
பின்னைமறைக்குப் பிரணவமாய்வந்தவனே 17

வேங்கைமரமாகி மெல்லியற்குத்தானீழலாய்
ஓங்கிவளர்ந்தெழுந்தே உதவிசெய்யவந்தவனே 18

காலிற்சிறுசதங்கைகட்டவொண்ணுக்காலமதில்
பாலித்தவெண்ணீரும் பரப்பியபாலகனே 19

சிவனார்திருமகனே செப்புமறுமுகனே
கவனரதமேறிவரும் கதிர்காமவேலவனே 20

ஆணிப்பொன்மேனியா னகங்களிக்கவந்நாளில்
மாணிக்கவல்லிமகிழ்வான்பொருளைச்சொன்னவனே 21

கைத்துவசமசைய காலசையவேலசைய
முத்துவடமசைய முன்வந்துநின்றவனே 22

நீலக்கடன்மேனி நெடுமாரன்முருகோனே
சாலவுலகனைத்துஞ் சாற்றும்பெருமானே 23

துள்ளுமயிலேறித் தொலையாதசூரர்களைக்
கொள்ளைகொள்ளவந்த கொற்றமிகும்வேலவனே 24

வெள்ளிமயிலேறி வேல்வாங்கிவெற்றிகொண்ட
அள்ளித்திருநீறணிந்த வாறுமுகத்தரசே 25

செங்காட்டினின்றே சிறுத்தொண்டன்தன்மகனை
மங்காமற்காத்தளித்த வள்ளன்மகனாரே 26

வெள்ளியிருங்கொம்புடைய வேழத்தின்பின்பிறந்து
வள்ளிதனைமணந்து வானமயிலில்வந்தவனே 27

பொன்றுமவுணர் புரமூன்றும்வெந்துவிழ
அன்றுநகைசெய்த வரனார்திருமகனே 28

சங்கமிகுந்தலவுஞ் சரவணையில்வந்துதித்து
மங்கையுமைதனக்கு வாய்த்தமகனாரே 29

வேலப்புனத்திருந்து வேடர்தமைகாத்தருளிக்
கோலக்குறமாது கொங்கைகளிற்சேர்ந்தவனே 30

கண்ணிரண்டுநீர்சொரியக் கைகுவித்துநின்றவர்க்கு
எண்ணரியநற்பதவியீ கைந்துநின்றவனே 31

மூவர்மேழுமுனிவர்க ளந்தணர்மகிழத்
தேவர்சிறைமீட்ட சேவகனுநீயலவோ 32

மன்றுதோறாடுவள்ளல் மனங்களிக்கக்
குன்றுதோறாடுங் குமரகுருநீயலவோ 33

வீறுசரவணையில் விளங்குமறுபிள்ளைகளாய்
கூறுபடவேவளர்ந்த குமாரதேவநீயலவோ 34

தாருகாசூரனுடல் தாரணியிலேவிழக
கூறுடையவேல்விடுத்த கொற்றவனுநீயாமே 35

அண்டங்குலுங்க வாழியேழுங்கலங்க
திண்டிறல்சேர்கொக்கைவென்ற சேவகனுநீயாமே 36

உண்ணாமுலைப்பாலை யுண்ணாமல்வாங்கியுண்ட
அண்ணாமலைமகனே யாறுமுகவேலோனே 37

வையாபுரியானே வாழ்மயிலைவெற்பானே
ஐயாபழனிமலை யாளுமுருகோனே 38

மூவர்முனிவர் முப்பத்துமுக்கோடி
தேவர்புகழுந் தெய்வசிகாமணியே 39

வேதப்பொருளே விளக்கேநல்விண்மணியே
போதப்பொருளே புலவர்சிரோமணியே 40

கண்ணேகரும்பே கற்பகமேகண்மணியே
விண்ணாரமுதே யிளங்குமயில்வீரோனே 41

பூவின்மணமே பொன்னேபுகழொளியே
தேவின்முதற்றேவே தேவர்சேனாதிபதியே 42

பாலிற்சுவையே பகாரியமுக்கனியே
கோலவுமைக்கினிய கொற்றவனேசண்முகனே 43

கந்தர்தாலாட்டைக் கற்றோருங்கேட்டோரும்
இந்திரனைப்போலவினி தூழி வாழ்ந்திருப்பார் 44

நற்கீரதேவர்நயந்துரைத்த வாய்மொழிக்கே
எக்காலங்குற்றமில்லை யென்பார்கள்கற்றோரே. 45

நற்கீரதேவர் அருளிச்செய்த

குமரதாலாட்டு முற்றிற்று.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த கானத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோள்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும். அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்ட்கார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.